REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 17உ சனி (3—12—55) ★ ★ வெளியூர்: கார்த்திகை 18உ ஞாயிறு (4—12—55) [இதழ் 147

ஆப்கனில் 'பெருந் தலை'கள் கைது

ஆப்கன் பாதுகாப்பு அமைச்சரும், சேனாதிபதியுமான ஜெனரல் முகமது அரீப் என்பார், ஆப்கன் பிரதமர் தாவூத் கானின் உத்தரவின்மீது பதவியிலிருந்து நீக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார் என்றும், அவரைத் தொடர்ந்து மற்றும் 70 பேருக்கும் அதிகமான இராணுவ, சிவிலியன் அதிகாரிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பாகில்தான் செய்தி நிறுவனம் தகவல் தந்துள்ளதாம்.

இவர்களைத் தவிர, இன்னும் பல 'பெருந் தலைகள்' எல்லாம்கூட எந்தச் சமயத்திலும் கைது செய்யப்படலாம்

(4-ம் பக்கம் பார்க்க)

தேவிகுளம், பீர்மேடு :

கம்யூனிஸ்டுகளிழைத்த துரோகம்

'மாளிகை வாழ்வோர் பாராமுகத்தால் இரத்தப் புரட்சி மூளும்'

'பெருந் தொகையான போலீஸ்— இராணுவத்தாலும் ஒடுக்க முடியாது'

'காலம் காட்டும் கருத்தறிந்து திருந்துங்கள்'

சேரி வாழ்வோர் பற்றி காமராசரின் நீலிக்கண்ணீர்

சென்னை, டிச. 3—

"வீடு கட்டித் தருதல் போன்ற அதிமுக்கியமான துறையில் நாம் ஈடு செய்ய வேண்டியது நிறைய இருக்கிறது. அத்துறையில் இதுவரை நாம் ஆற்றியுள்ள பணி கடலில் ஒரு துளி போன்றே உள்ளது.

"குடையும் வறுமைக்கிடையில், செல்வமும் செல்வாக்கும் படைத்திருப்பவர்கள் சிறந்த மாளிகைகளில் வசித்து வருகின்றனர். அவர்கள், தங்களைச்சுற்றியுள்ள சகதியில் வதியும் மக்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பது குறித்து ஒரு விநாடியும் சிந்தித்துப் பார்ப்பது கிடையாது.

"ஏழைகளுடைய நம்பிக்கையைப் பெறத் தவறுவதினால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் கற்பனை செய்து காணும்படி பொருள் படைத்தவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். மக்கள் அனைவரின் முழு ஒத்துழைப்பும் இல்லாத நிலையில் எந்த ஜனநாயக ஏற்பாடும் சிறந்து செயல்படாது. தங்களிடமுள்ள செல்வத்தையும், செல்வாக்கையும் முறைதவறி பயன்படுத்தி, தங்களை அதிகாரத்திலும், அந்தஸ்திலும் உயர்த்திக்கொள்ள பணம் படைத்தவர்களில் சிலர் அரும்பாடுபட்டு வருகின்றனர். வறியவர்களையும், நசுக்கப்பட்டுக் கிடப்பவர்களையும் அலட்சியப்படுத்தி வருவதினால் விளையக்கூடிய விளைவுகளை நினைத்துப்பார்க்க அவர்கள் எண்ணியதுண்டா?

"இப்போதே, இவ்விடத்திலேயே இதுபற்றி திட்டவட்டமாகக் கூறிவிடுகிறேன்—தங்களுடைய பண பலத்தினால், நமது ஜனநாயக ஏற்பாட்டில் உறுதியான பிடிப்பைப் பற்றி இருக்கலாம் என்று செல்வந்தர்கள் எண்ணிக்கொண்டு இருப்பார்களேயானால், அந்தப் போக்கு எதிர்பாரா வகையில் நாட்டை ஒரு பெரும் இரத்தப் புரட்சிக்குத் துரத்திச் செல்வதில் முடிவுறும் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். அதை ஒருவராலும் தடுத்துவிட முடியாது; பெருந்தொகையான போலீசாலும், இராணுவத்தாலும்கூட அதை தடுத்து நிறுத்த முடியாது.

"இவ்வெளிய பாடத்தைத்தான் சமூகத்தின் உச்சியில் இருப்பவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். தீர்ப்பு நாள் வருவதற்கு முன்னதாக, காலங்காட்டும் கருத்தினைத் தெரிந்து, வறியவர்களிடத்தும், நசுக்கப்பட்டவர்களிடத்தும் நம்பிக்கை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். அதன் பலனாக ஏழைகளும் தங்களுடைய இன்றியமையாத் தேவைகளை அரசாங்கமும், சமுதாயமும்

(4-ம் பக்கம் பார்க்க)

உளம்குமுறினால் போதுமா?

சென்னை நகரின் படுமோச நிலை

சுகாதார அமைச்சர் தரும் விளக்கம்

சென்னை, டிச. 2—

"இந்தியாவில் குடியிருப்பு வசதி நிலைமை மிக மிக மோசமானதாக இருக்கிறது. அதிலும் குறிப்பாக, இரண்டாவது உலகப் போருக்குப் பின்னர் நகர்களின் நிலைமை படுமோசமாகி வருகிறது.

"சென்னை நகரில் மட்டும் சேரிகளின் எண்ணிக்கை 310-க்கு உயர்ந்துவிட்டது. இந்த 310 சேரிகளிலும் மொத்தம் 40,000 குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றனர். சேரி வாசிகளைத் தவிர, சாலையோரங்களிலும், நடைபாதைகளிலும் மொத்தம் 6,000 குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றனர். சென்னை நகரில் மட்டும், சேரிகளிலும், நடைபாதைகளிலுமாக வசிப்போரின் மொத்தத் தொகை $2\frac{1}{2}$ இலட்சம் ஆகிறது. சென்னை நகரின் மொத்த மக்கள் தொகையே $16\frac{1}{2}$ லட்சம்தான்.

[இந்த எண்ணிக்கை, சென்னை நகரின் மொத்த மக்கள் தொகையில் சுமார் 15 சத விகிதத்தினர் என்றாகிறது.]

"சென்னை நகரில் மொத்தம் 1,10,000 குடியிருப்பு வீடுகள் இருக்கின்றன இவற்றில் 20- முதல் 25 சத விகித வீடுகள் மிக மோசமான நிலையிலிருக்கின்றன.

"தொத்து வியாதிகள் போன்றவை பரவ — குறிப்பாக குழந்தைகளிடையே அதிகமாகப் பரவுவதற்குக் காரணமே, இந்த வீடுகளின் நெருக்கடியும், அவற்றில் வாழும் மக்களின் நெருக்கடியும்தான் காரணமாகும். சேரி வாழ்கின்ற மக்களின் நோய் நொடிக்கான காரணம் உடல் சம்பந்தப்பட்டவைகள் மட்டுமல்லாமல், அவர்களின் மனோவியாதியும் ஒன்றாகும்."

இவ்வாறெல்லாம், சென்னை மாநில சுகாதார அமைச்சர் ஏ. பி. ஷெட்டி அவர்கள், சென்னை இராஜா அண்ணாமலை புரத்தில், மத்திய சர்க்கார் நிதி உதவியுடன் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கென வீடு கட்டித் தரும் திட்டத் துவக்க விழாவிற்குத் தலைமை வகித்து உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'ஜீவானந்தம் கொடுத்த வாக்குறுதி எங்கே?'

தி. த. நா. காங்கிரஸ் செயலாளர் உண்மையை அம்பலமாக்குகிறார்

மூணார், டிச. 3—

"திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் பிரதிநிதிகள், சென்னையில் 4—11—55-ல், 'ஓட்டல் எவரஸ்டி'ல் தங்கி இருக்கும்போது, கம்யூனிஸ்டுத் தோழர் ப. ஜீவானந்தம் (எம்.எல்.ஏ.,) நேரில் வந்து எங்களைச் சந்தித்து, 'திரு—கொச்சியிலுள்ள கம்யூனிஸ்டு உறுப்பினர்களையும் (எம்.எல்.ஏ.,) தேவிகுளம், பீர்மேடு தமிழர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு இணங்க வைத்திருக்கிறோம்' என்று சொன்னதுடன், கம்யூனிஸ்டு கட்சியின் ஒத்துழைப்பும், ஆதரவும் என்றைக்கும் இருக்குமென்று வாக்குறுதியும் கொடுத்துள்ளார்.

"தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்கள் சென்னையுடன் இணைய வேண்டுமென்ற ஒரே பிரச்சினையில் சென்னை சட்டசபையில் தமிழ் நாடு கம்யூனிஸ்டு சட்ட சபை உறுப்பினர்கள் 15 பேர் நடுநிலைமை வகித்ததாகச் செய்தித் தாள்கள்மூலம் அறிகிறோம்.

"ஆகையால், சொல் ஒன்றும், செயல் ஒன்றுமாக தேவிகுளம், பீர்மேடு பிரச்சினையில் கம்யூனிஸ்டுக் கட்சி நடந்திருக்கிறது. கம்யூனிஸ்டுக் கட்சி செய்துள்ள இத்துரோகம் இப்பகுதிவாழ் ஒன்றரை இலட்சம் தமிழர்களுக்கு விரோதமாகச் செய்த துரோகமாகும். ஆகவே, மக்கள் விரோதக் கொள்கையில் ஈடுபட்டுள்ள கம்யூனிஸ்டுக் கட்சியின் இப்போக்கை எனது தாய்நாட்டிலுள்ள சக-தொழிலாளர்களும், தொழிற் சங்கங்களும், தமிழ்ப் பெரியோர்களும் எதிர்த்து கண்டனக்குரலை எழுப்பி, அவர்களுக்கு தமிழர்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு, நாகரீகம் முதலியவற்றை உணர்த்தும்படி தமிழ் மக்களின் சார்பாக உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

—இவ்வாறு, தேவிகுளம், பீர்மேடு தி. த. கா. காங்கிரஸ் 'குழு' செயலாளர் திரு எம். ராமய்யா வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவ்வறிக்கையில், மேலும் அவர் கூறியுள்ளதாவது:—

"1947-ம் வருடம் பிற்பகுதியில், இப்பகுதி மக்கள் சமஉரிமையாக வாழவும், முன்னேறவும், திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதற்கொண்டு சென்னையிலுள்ள தமிழ் மக்களும், எல்லா அரசியல் கட்சிகளும், தலைவர்களும் இதை ஆதரித்து வந்துள்ளனர்.

இப்பகுதியில் நடைபெற்ற பல தேர்தல்களிலும் இவ்விருதாலுகாக்களும் தமிழ் நாட்டுடன் சேர வேண்டும் என்ற கோரிக்கையை வைத்துத்தான் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் மாநில புனரமைப்பு குழு தனது தீர்ப்பில், தேவிகுளம், பீர்மேடு தாலுகாக்களை தமிழ்நாட்டுடன் சேர்ப்பதற்குச் சிபாரிசு செய்யத் தவறிவிட்டது.

இதை எதிர்த்து தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கட்சிகளும் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

மேலை நாட்டுப் பத்திரிகையாளர்!

'முதலாளித்துவக் கூலிகளாவர்!'

கம்யூனிஸ்டு செயலாளர் குருஷ்சேவ் கூறுகிறார்

காலனி ஆதிக்கம் பற்றி வாக்குவாதம்

இரங்கூன், டிச. 2—

பர்மாவில் இரண்டாவது நாளாக சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள சோவியத் ரஷ்யத் தலைவர்கள், இங்குள்ள பௌத்த பொற்கோயிலைப் பார்வையிட்டனர்.

பொற்கோயிலைப் பார்வையிட்ட பின் ரஷ்ய கம்யூனிஸ்டு செயலாளர் குருஷ்சேவ், அவர்களது சுற்றுப் பயணத்தில் கூடவே வரும் மேற்கத்திய பத்திரிகை நிருபர்களுடன் மோதிக் கொண்டதாகத் தெரியவருகிறது.

கூட வந்த ரஷ்யாவில் உள்ள பர்மியத் தூதுவரை நோக்கி, குருஷ்சேவ், "இந்த அழகான பொற்கோவில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பர்மிய மக்களால் கட்டப்பட்டிருந்தும், அவர்களை காலனி ஆதிக்கவாதிகள், 'காட்டுமிராண்டிகள்' என வர்ணிக்கின்றனர். வில்லியம் ஆட்சிக்கு முன்னால் பிரிட்டன் ஒரு நாடாகவே இருந்ததில்லை," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதைக்கேட்ட மேற்கத்திய நிருபர்களுக்குக் கோபம் வந்ததாம்!

"ரஷ்யர்கள் எப்போதும் காலனி ஆதிக்கத்தை எதிர்ப்பவர்கள் என்று சொல்லிக்கொள்வதானால், கிழக்கு ஜெர்மனியில் நடப்பது என்ன?" என்று ஒரு நிருபரும், "லாட்வியா, எஸ்தோனியா இவை எல்லாம் பற்றிய விஷயம் என்ன?" என்று மற்றொரு நிருபரும் கேட்டனராம்.

உடன் குருஷ்சேவ், "கிழக்கு ஜெர்மனிக்குள் என்ன நடக்கிறது என்பது உங்கட்குத் தெரியாது; நீங்கள் முதலாளிகளின் கூலி பெறும் அடிமைப் பத்திரிகையாளர்கள் என்பதால், கிழக்கு ஜெர்மானியர் என்ன செய்கின்றனர் என்பது உங்களுக்குப் புரியாது; நீங்கள் ரஷ்யாவைப் பற்றி ஏதேனும் நல்லதாக எழுதினால், நீங்கள் பட்டினி கிடந்து சாகவேண்டியதுதான்; ஏனெனில், முதலாளித்துவப் பத்திரிகைகள் 'அவற்றை வெளியிடமாட்டா," என்று பதிலளித்திருக்கிறார்.

சென்னை-இரங்கூன் கப்பல் போக்குவரத்து

இரங்கூன், டிச. 2—

இரங்கூன் இந்தியர்கள் கூட்டம் ஒன்றில், இரங்கூனுக்கும்—சென்னைக்கும் இடையே ஒழுங்கான கப்பல் போக்குவரத்து ஏற்பாடு செய்யுமாறு இந்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் ஒன்று நிறைவேறியுள்ளது.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 3—12—'55 சனி

அபாய அறிவிப்பு

'நாடு முழுவதிலும் ஒரே மொழி மூலம் உயர்நிலைக் கல்வியைத் தருவது என்ற கோட்பாட்டின் அடிப்படையில்தான், எல்லாக் காலத்திலும் இந்தியாவின் ஒற்றுமை கட்டப்பட்டிருந்தது' என்று பணிக்கர், சென்னை கலைக் கல்லூரியில் குறிப்பிட்டிருந்தது குறித்து ஏற்கனவே சில கூறியிருந்தோம். கடந்த நூற்றுமுப்பது ஆண்டுக் காலமாக, இந்தியாவின் ஒற்றுமையை உருவாக்கும் பணியினைப் புரிந்து வந்திருப்பதாகவும், அதற்கு முன்னர் சமஸ்கிருதம் அப்பணியினைச் செய்து வந்திருப்பதாகவும் பணிக்கர் பேசியுள்ளார்.

சமஸ்கிருதம் ஆற்றிய பணியை மெய்ப்பிப்பதற்காக தென்னிந்தியாவில் தோன்றிய சங்கரரும், இராமானுஜரும் இந்தியா முழுவதிலும் செல்வாக்குப் பெற வேண்டும் என்ற உள்ளக்கிடக்கையுடன் தங்கள் தத்துவங்களை சமஸ்கிருதம் எனும் வடமொழியில் இயற்றியதாகவும் சர்தார் பணிக்கர் சான்று கூறுகிறார்.

சங்கரரும் இராமானுஜரும் தங்கள் தத்துவங்களை வடமொழியில் எழுதி வைத்திருப்பதற்கு, பணிக்கர் குறிப்பிடுவது போன்று, இந்தியா முழுதிலும் செல்வாக்குப் பெறவேண்டும் என்ற நோக்குடன் செயலாற்றப்பட்டதா, அல்லது தங்கள் இனத்தவரின் தாய் மொழி அல்லது தந்தை மொழி எனக் கூறப்பட்டு வந்த வடமொழியில்தான் எழுத வேண்டும் என்ற நோக்கத்துடன் எழுதப்பட்டதா என்பது ஆராய்ந்து முடிவு கட்டத்தக்கதாகும். அதுவுமன்றி, வடமொழியின் பால்தங்களுக்கு இருந்த பற்று, பாசம், பக்தி, பயிற்சி, ஆகியவற்றின் காரணமாக, தங்கள் கருத்துக்களை அறிவிக்க அம்மொழியை இவ்விரு மதாசிரியர்களும் தேர்ந்தெடுத்துக் கொண்டார்களா, அல்லது அகில இந்திய செல்வாக்குப் பெறக் கருதி அவர்கள் வடமொழியைக் கைக்கொண்டார்களா என்பதும் சீர்தூக்கிப் பார்க்கத்தக்கதாகும்.

வடமொழியை 'தேவ பாடை' எனவும், தென்மொழியான தமிழை 'சூத்திர பாடை' எனவும், இன்றும் இப்பொழுதும் சங்கரர் — இராமானுஜர் கொடிவழி வந்தவர் எனத் தங்களைப் பிரித்துப் பேசிக் கொள்ளுகிறவர்களில் பெரும்பான்மையினர் கூசாமல், கூறிக் கொள்ளுகிறார்களென்றால், பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த சங்கரரும்—இராமானுஜரும் இரண்டு மொழிகளையும் குறித்து எத்தகைய கருத்துக் கொண்டிருப்பர் என்பது கூறாமலே விளங்கக் கூடியதாகும்.

சர்தார் பணிக்கர் குறிப்பிடுவதுபோன்று, இந்தியா முழுதிலும் செல்வாக்குப் பெற வேண்டும் என்ற காரணத்திற்காக என்பது மட்டுமல்லாமல், வடமொழி 'தேவ பாடை' என்ற முக்கிய காரணத்திற்காகவும், அம்மொழியிலேயே தங்களுக்கும் சிறந்த பயிற்சி இருந்த காரணத்திற்காகவுந்தான் சங்கரரும்—இராமானுஜரும், தங்கள் கருத்தை அம்மொழியில் எழுதி வைத்திருக்க வேண்டும் என்பது முக்காலும் உறுதியாகும். அக்கால நிலையையும் சங்கரர்—இராமானுஜர் இன மக்கள் கொண்டிருந்த கண்ணோட்டத்தையும் சீர்தூக்கிப் பார்க்கும் எவரும் வடமொழியில் அவ்விரு ஆசிரியர்களும் நூல்பற்றிவைத்தமைக்கு சர்தார் பணிக்கர் கூறும் காரணம் வெறும் பொருந்தாக் கூற்றே என்பதை நன்கு புரிந்துகொள்ள முடியும். இவ்வுண்மையை சர்தார் அறிந்திருக்கமாட்டார் என நம்மால் நம்பமுடியவில்லை. அறிந்திருக்கும் காரணத்திலேயேதான் 'ஆதியில் வடமொழியும் நமக்கு ஒரு அன்னியமொழியே என்பதை நாம் மறந்துவிடக்கூடாது' என்று சர்தார், அதே சொற்பொழிவில் எச்சரிக்கையும் செய்திருக்கின்றார் போலும்!

பல்கலைக் கழகங்களின் போதனா மொழியாக இந்தி தான் இருந்தாகவேண்டும் என அம் சர்தார் பணிக்கர் வாதிடுகிறார்.

இந்தி உட்பட பதினான்கு மொழிகளை 'தேசிய மொழிகள்' என இந்திய அரசியல் சட்டம் ஒப்புக்கொண்டுள்ளது. இவ்வரசியல் சட்ட ஏற்பாட்டை வைத்துக்கொண்டு, ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள ஒவ்வொரு மொழிவழி வந்தவர்களும், தங்கள் தங்கள் மொழிக்கு ஏதோ ஒரு புதிய வாழ்வு கிடைத்துவிட்டது போல் திருத்தாண்டவம் புரிகின்றனர்.

எடுத்துக்காட்டாக, அரசியல் சட்டத்தில் தமிழ் மொழியும் தேசிய மொழிகளில் ஒன்றாக ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதால், 'கல்லூரிகளில் தமிழ்—நீதிமன்றங்களில் தமிழ்—ஆட்சிமன்றங்களில் தமிழ்—எங்கும் தமிழ்—எல்லா இடங்களிலும் எங்கள் தமிழ்'—எனச் சிலர், தமிழுக்கு இப்பொழுதே ஏற்றம் கிடைத்துவிட்டது போன்றே ஏக்காளமிட்டு இறுமாந்துள்ளனர். அப்பெரும் குணவான்களின் கண்ணையும் கருத்தையும், சர்தார் பணிக்கர், பல்கலைக் கழகநிலையில் போதனா மொழியாக இந்தி மொழிதான் இருக்கவேண்டும் எனத் திட்டவட்டமாகக் கூறுவதின் மூலம் நன்கு திறந்து விட்டிருக்கிறார். இனி இந்திக்கும் — தமிழுக்குமுள்ள உறவு பற்றியும், வாழும் இடம் பற்றியும், குடியாசுத் தலைவரோ பிரதமரோ வேறு எவரோ, தமிழர் மனங் குளிரப் பேசின போதிலும், சர்தார் பணிக்கரின் கருத்துரையைக் கேட்ட தமிழர்கள், அத்தலைவர்களின் இனிமையான பேச்சில் நம்பிக்கை வைக்கவுமாட்டார்கள்—ஏமாந்து நிற்கவுமாட்டார்கள்.

பல்கலைக் கழக போதனா மொழி பற்றி சர்தார் பணிக்கர் கூறியிருப்பது, அவர் தம் சொந்த கருத்து என்ற அளவோடு நின்றுவிடுவதன்று; இந்தியப் பேரரசின் எதிர்கால [illegible] பறிவித்திருக்கிறார் என்றே கூற வேண்டும். இந்தி மொழி வெறியர்களின் சதி எண்ணத்தைத்தான் பணிக்கர் பறைசாற்றியுள்ளார் என்றேதான் கொள்ளவேண்டும். கூடிய விரைவில் இந்தி மொழி ஏகாதிபத்தியமாக உருவெடுக்க இருக்கிறது என்பதைமுன்கூட்டியே எச்சரிக்கும் ஒரு முன்னறிவிப்பே பணிக்கரின் பேச்சு!

எனவே, பணிக்கரின் சொற்பொழிவு இந்தி ஏகாதிபத்தியம் பற்றி பறைசாற்றப்பெற்ற ஒரு அபாய அறிவிப்பாகும். தமிழர்கள்—மொழிப்பற்று பட்டுவிடாதவர்கள்—கண் விழிக்கவேண்டும். தாய் தமிழைக் காக்க சூளுரைத்துக் கொள்ளவேண்டும்.

பெண்ணுக்கும் தந்தை சொத்தில் பங்கு

'உயில்' எழுதிவைக்கப்படாத எந்த சொத்துக்களுக்கும் மகனுக்கு உள்ளதைப் போன்றே மகளுக்கும் சமஉரிமை கிடைப்பதற்கான வழி செய்யும் இந்த வாரிசு உரிமை மசோதா, டெல்லி ராஜ்யங்கள் சபையில் ஒருமனதாக—ஆரவாரத்துடன் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இந்த மசோதா வாக்கெடுப்பிற்கு விடப்பட்டபோது, அதனை எதிர்த்து ஒருவர் மட்டும் குரல் எழுப்பியிருக்கிறார்.

ராஜ்ய சபையில் நிறைவேற்றப்பட்ட இம்மசோதா அடுத்து மக்கள் சபையின் பரிசீலனைக்கு எடுத்துச் செல்லப்படும்.

ஆங்கிலத்தைக் கைவிடுவதற்கு எதிர்ப்பு

[illegible] ஆண்டுகளேனும் வேண்டும்

அச்சுதன் நாயர் இடித்துரை

"ஆங்கிலத்தை வெளிநாட்டு மொழி என்று கூறி ஒது[illegible]வதில் அர்த்தமேயில்லை. இந்த நூற்றாண்டில் உலக முழு[illegible]க்கும் பொது மொழியாக ஆங்கிலம் இருந்து வருகிறது. [illegible] யுத்த நிறுத்த ஒப்பந்தங்கள் ஆங்கிலத்திலேதான் எ[illegible] பட்டிருக்கின்றன. இந்தியாவின் அரசியல் சட்டமும் மு[illegible] ஆங்கிலத்தில்தான் எழுதப்பட்டது; இன்னும் மொழி பெ[illegible]கப்படவில்லை,"

—என்று, சேலம் நகர கல்லூரித் தலைவர் அச்சுதன் நாயர், [illegible] ரோட்டரி கிளப்பில், 'பல்கலைக் கழகத்தில் மொழிப் பிரச்[illegible]' என்ற தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் சொன்னார்:—

"ஆங்கிலத்தின் இடத்தை இந்தி மொழி ஏற்பதற்காக ஒதுக்கப்பட்ட 15 ஆண்டு காலம் போதுமானதல்ல; தமிழ், வங்காளம் அல்லது மலையாளம் போன்ற 14 தேசிய மொழிகளைப் போன்று இந்தி இன்னும் முன்னேற்றம் அடையவில்லை.

"மாநில வட்டார மொழிகளின் கை மேலோங்குவதால், அவைகளின்மீது ஆதிக்கம் செலுத்தும் சக்தி இந்திக்குக் கிடையாது. பல மொழிகளைவிட இலக்கியத் துறையில் இந்தி பின்தங்கியுள்ளது 'குறைகள் நீக்கப்பட்டுவிடும்' என்று, இந்தி ஆதரவாளர்கள் கூறுகிறார்கள்; ஆனால், அவ்வாறு ஏற்படுவதற்கு வெகுநாளாகும். உஸ்மானியா பல்கலைக் கழகம், ஆங்கில இலக்கியங்களை உருதுவுக்கு மொழி பெயர்க்க முயன்று 30 வருடத்தில் 400 புத்தகங்களை வெளியிட்டிருக்கிறது; இன்னும் 64,000 புது புத்தகங்களை வெளியிட வேண்டும். இவை வெளியிடப்படுவதற்குள்ளாக பழைய கருத்துக்களெல்லாம் அந்தக் காலத்திற்குப் பொருத்தமில்லாமல் [illegible]விடும். சர்க்கார் ஆதரவு வே[illegible]மானால் ஒரு சாதகமான நிலையை உண்டாக்கலாம்; ஆ[illegible] கவிஞர்களாலும் இலக்கிய கர்த்[illegible]களாலும் அபிவிருத்தி செ[illegible]படும் அளவுக்கு எந்த சர்[illegible] ஏஜென்சியாலும் அந்த மொழி[illegible] முன்னேற்றத்தை உண்டாக்கி[illegible] முடியாது. ஆகையால் 50 ஆ[illegible] காலத்திற்காவது ஆங்கிலம் [illegible]னும் தொடர்ந்திருக்கவேண்[illegible] 50 ஆண்டுகளுக்குப் பிறகு இ[illegible] பிரச்சினையை மீண்டும் பரிசீ[illegible] செய்யலாம். அதற்குள்ளாக [illegible] முன்னேற்றம் அடைந்துவிட்ட[illegible] ஆங்கிலத்தை ஒதுக்குவதில் [illegible] சேதமிருக்காது."

மக்கள் சபையி[illegible]

'கோரம்' இல்லாக் கொடு[illegible]

தொடர்ந்து நீடிக்கிறது

புதுடில்லி, டிச. [illegible]

மக்கள் சபையில் நேற்று [illegible]காருக்குத் தோல்வி ஏற்பட்[illegible]தும் இன்று மீண்டும் சபை[illegible] 'கோரம்' இருக்கவில்லை.

"சபையில் உள்ள 'மத்[illegible] அறை'யை மூடிவிட வேண்டி[illegible]தான் 'கோரம்' ஏற்படச் செ[illegible]தற்கு வேண்டிய ஒரே வழியாகு[illegible]" என்று மந்திரி சத்தியநாராய[illegible] சின்ஹா தெரிவித்தார்.

தோழர் எச். வி. காமத், [illegible]றும் சபையில் கோரம் இல்[illegible]தைச் சுட்டிக்காட்டிக் கண்டித்[illegible]

உறுப்பினர்கள் எல்லோ[illegible] 'மத்திய அறை'யில் இருப்ப[illegible] ஒரு குரல் கேட்டது.

உதவி சபைத் தலைவர் அ[illegible]சயனம் அய்யங்கார், 'மத்[illegible] அறை'யில் அப்படி என்ன த[illegible] கவர்ச்சியிருக்கிறது—என்று [illegible]டார்.

உடனே தோழர் காமத், 'கா[illegible] இட்லி, தோசை முதலியவைதா[illegible]—என்று பதில் கூறியபே[illegible] அனைவரும் சிரித்தனராம்!

"சபையில் 'கோரம்' இரு[illegible]மாறு பார்த்துக்கொள்வது சர்க்[illegible] பொறுப்பு," என்று சபை உத[illegible] தலைவர் குறிப்பிட்டிருக்கிறார்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் அமைப்பு இந்தியப் பேரரசின் நேர்மைக்கு உரைகல்

தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது —வடநாடு வளர வழிகோலப்படுகிறது

'தினமலர்' தரும் படப்பிடிப்பு

"திரு—கொச்சிக்கான மாநில சர்க்காரின் திட்டத் தொகையை மத்தியசர்க்கார் வெட்டிக் குறைத்ததற்கு நமது மாநில சர்க்கார் வருத்தம் தெரிவித்திருக்கிறது.

"பொதுவாக, 'தென் இந்தியா-வட இந்தியா' என்ற பாகுபாட்டை தெளிவாக எடுத்துக் காட்டும் வகையிலேயே இந்த ஐந்து வருடத் திட்டப் பங்கீடுகள் அமைந்திருக்கின்றன.

"பெரிய தொழிற்சாலைகள், நீர்ப்பாசனத் திட்டங்கள் யாவும் வட இந்தியாவில்தான் நிறுவப்பட்டிருக்கின்றன என்பதை புள்ளி விவரக் கணக்குப்படி எடுத்துக் காட்டி, மக்களை சோர்வடையச் செய்யக்கூடிய சந்தர்ப்பங்களைக் கொடுக்காமல் நடந்து கொள்வதில்தான் மத்திய சர்க்காரின் விவேகத்தைத் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

"'பெரிய மாநிலங்'களாக இருப்பதால் சில மாநிலங்களுக்கு மத்தியப் பீடத்தில் 'பெரும் கை' கிடைத்து வருவதுபோல் திட்டத் தொகைப் பங்கீட்டிலும் 'தாராசு முனை' தருவதற்கு இடம் கிடைத்து விடக் கூடாது.

"தென் இந்தியாவிற்குப் போதுமான தொகைகள் அனுமதிப்பதில் கசப்புகள் காட்டவே கூடாது. வட இந்தியாவில் 'பிராட்கேஜ்' இரயில் வண்டித் தொடர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துவிட்டு, தென் இந்தியாவில் 'மீட்டர்கேஜ்' இரயில் தொடர்களை விரிவுபடுத்துவதற்குக்கூட 'முனக்கம்' கொள்வது மிக மிகத் தவறு.

"தென் இந்தியாவிற்கு — பொதுவாக இரண்டாவது ஐந்து வருடத் திட்டத்தில், அதனுடைய பங்கிற்கு சற்று அதிகமாகத் தொகை ஒதுக்குவதால்கூடப் பாதகமெதுவும் ஏற்பட்டு விடாது.

"பம்பாய், கல்கத்தா போன்ற பெரும் நகரங்களின் வளர்ச்சிக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் தென் இந்திய நகரங்களுக்கும் கிடைக்க வேண்டும்.

"இரண்டாவது ஐந்து வருடத் திட்ட அமைப்பைப் பார்த்துத்தான் மத்திய சர்க்காரின் நேர்மையான போக்கையே நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது."

* * *

மத்திய சர்க்காரின் இந்தப் போக்கினையும், மாநில சர்க்காரின் கவலையையும் குறிப்பிட்டு, திருவனந்தபுரத்திலிருந்து வெளியாகும் 'தின மலர்' இதழின் (29—11—55) தலையங்கப் பகுதியில் தரப்பட்டிருக்கும் வாசகங்கள் தான் மேலே தரப்பட்டிருப்பவையாகும்.

திரு-கொச்சி தொழிற்சா[illegible]

வெளி நாட்டவர் மூலதன[illegible] அனுமதி

புதுடில்லி, நவ. 8[illegible]

திரு-கொச்சியில் துவங்கப்[illegible]விருக்கும் மரவள்ளிக் கிழ[illegible] மாவுப் பொருள் தயாரிக்[illegible] தொழிற்சாலை ஒன்றில் ரூ.[illegible] பெறுமான 15,000 முதலீட்[illegible] பங்குகளை வெளி நாட்டவர் [illegible]றுக் கொள்ள அனுமதிக்கப்[illegible]டிருப்பதாக, வர்த்தக, தொழில் [illegible]திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி [illegible]கள் சபையில் தெரிவித்திருக்கி[illegible]

அந்தத் தொழில் நிறுவனத்[illegible] மொத்த மூலதனப் பங்கீடுகள் [illegible] 10 வீதம் 45,000 என்றும் அ[illegible] தொழிற்சாலை ஆண்டுதோ[illegible] 6,000 டன் மாவுப் பொருள் [illegible]பத்தி செய்யும் என்றும், அ[illegible] அத்தனையும் ஏற்றுமதிக்கான[illegible]பத்தியாயிருக்கும் என்றும் அ[illegible] தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவில் ஏற்பட்ட இரயில் விபத்துக்கள்

21 மாதங்களில் 6,234

புதுடில்லி, டிச. 1—

"இந்தியா முழுவதிலுமாக 1954-ம் ஆண்டில் 3,481 - இரயில் விபத்துக்களும், 1955-ம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 2,753 விபத்துக்களும் ஏற்பட்டன,"

என்று, உதவி இரயில்வே மந்திரி ஓ. வி. அளகேசன் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

"இந்த விபத்துக்களினால் 1954ம் ஆண்டில் 300-க்கும் அதிகமான பேர் கொல்லப்பட்டனர்—713- பேர் காயம்பட்டனர்; 1955-ம் ஆண்டில் 49 பேர் கொல்லப்பட்டனர்—383 பேர் காயம்பட்டனர்; இதற்காக, நஷ்டஈடாக 1954-ல் ரூ. 83,00,000; 1955-ல் 7,00,000 கோரப்பட்டது," என்றும், அந்த உதவி மந்திரி தெரிவித்திருக்கிறார்.

"இவ்வாண்டில் நடைபெற்ற விபத்துக்களில் 1,081 விபத்துக்கள், மனிதர்களுடைய தவறுதல்களால் நடைபெற்றிருக்கின்றன; இரயில் எஞ்சின்களின் கோளாறுகள் காரணமாக 986 விபத்துக்கள் நிகழ்ந்திருக்கின்றன,"

என்று கூறிய அவர், மேலும் மனிதர்களின் தவறுகளாலும், இயந்திரக் கோளாறுகளாலும் ஏற்பட்ட விபத்துக்களைத் தவிர மற்ற விபத்துக்கள் நிகழ்ந்தவற்றிற்குக் காரணங்கள் என்ன என்பது இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்றும், மொத்தத்தில், சென்ற ஆண்டைவிட, இவ்வாண்டில் (9 - மாதத்தில்) 84 விபத்துக்கள் குறைவுதான் என்றும் கூறியிருக்கிறார்.

ஆச்சரியந்தான்!

கருவைச் சிதைப்பதை சட்டப்படி அனுமதிக்கும் அதிசய உத்தரவை ரஷ்ய சர்க்கார் பிறப்பித்தது.

மருத்துவ மனைகளிலும், சர்க்கார் அங்கீகாரம் பெற்ற வைத்திய சாலைகளிலும் மட்டுமே கருச் சிதைவுக்கான சிகிச்சையைப் பெறலாம் என்று உத்தரவு கூறுகிறது.

கருச் சிதைவுக்கான தடை 20 ஆண்டுகளாக அமுலில் இருந்து வருகிறது.

"தாய்மைக்கு ஊக்கமளிக்கவும், குழந்தைகளின் நலன்களுக்காக இதுவரை அரசாங்கம் எடுத்துவந்த நடவடிக்கைகளைக் கருதியும், மாதரின் மதிப்பு தொடர்ந்து முன்னேறி வருவதை முன்னிட்டும் கருவைச் சிதைப்பதை தடை செய்யும் சட்டத்தை ரத்து செய்வது சாத்தியமாயிற்று" என்று சர்க்கார் உத்திரவு கூறுகிறது.

வீண் கருச் சிதைவுகளைச் சர்க்கார் தாய்மைப் பேணல், கல்வி வசதிகள் தடுக்கும்.

ரஷ்யாவில் மக்கள் தொகையை 300 கோடிக்கு உயர்த்தவேண்டுமென்று கம்யூனிஸ்டு கட்சி பொதுச்செயலாளர் குருஷ்சேவ் சொன்னார்.

கர்ப்பச் சிதைவு சம்பந்தமான இந்தப் புதிய உத்தரவு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளதாம்.

'சொத்து வரி' வழக்குகள்

1955 ஏப்ரல் முதல் தேதியிலிருந்து செப். 30-ந் தேதி வரையுள்ள காலத்தில், பல்வேறு மாநிலங்களிலும் சொத்து வரி சம்பந்தமாக 1,864 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்றும், அதில் 1,213 வழக்குகள் 'பைசல்' செய்யப்பட்டன என்றும், 'பைசல்' செய்யப்பட்ட வழக்குகள் மூலம் மொத்தம் ரூ. 43,41,418 வசூலிக்கப்பட்டது என்றும், 'பைசல்' செய்யப்பட்டவைகளில் 12 வழக்குகளில் எதிர்த்து வாதாடப்பட்டதென்றும், மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது

காரணம் தெரியாத 'புதிராக' இருக்கிறதாம்

நியூயார்க்—

"பொருளாதார உதவி என்ற முறையில், சோவியத் ரஷ்யா இந்தியாவுக்கு ஒன்றுமே செய்யவில்லையென்று சொல்லலாம்; இந்தியாவில் ஒரு உருக்குத் தொழிற்சாலையை நிர்மாணித்துத் தருவதற்கு அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; இதற்காக இந்தியா, 10 கோடி டாலரை அவர்களுக்குக் கொடுக்கப்போகிறது.

"இந்தியாவுக்கும், தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கும் இதைவிட நான்கு, ஐந்து மடங்கு அதிகமான தொகையை அமெரிக்கா வெறும் உதவியாகவே அளித்திருக்கிறது, ஆனால், அமெரிக்கா அளிக்கும் உதவியைவிட, ரஷ்யாவின் வியாபார பேரத்திற்கு அதிகமான புகழ் கிடைக்கிறது; இது ஒரு புதிராகவே இருக்கிறது; இதற்கு என்ன காரணமோ தெரியவில்லை,"

என்று, கானடா வெளிநாட்டு அமைச்சர் லெஸ்டர் பியர்சன் ஐ. நா. பத்திரிகை நிருபர்கள் சங்கத்தில் பேசுகையில் கூறியுள்ளார்.

"ரஷ்யத் தலைவர்களுக்கு இந்தியாவில் பிரமாதமான வரவேற்பு அளிக்கப்பட்டாலும், கம்யூனிசத்தின் அழிவுத் தன்மை குறித்து இந்திய மக்களின் கருத்து மாறவில்லை," என்று அவர் குறிப்பிட்டார்.

விசால ஆந்திரத்திற்கு தனி இரயில்வே வட்டாரம்

சட்டசபையில் கோரிக்கை

கர்னூல், நவ. 29—

"விசால ஆந்திரம் அமையும்போது, அதன் மிக விரிந்த பரப்பைக் கணக்கில் கொண்டு ஒரு தனி இரயில்வே வட்டாரம் அமைக்கவேண்டும்"

என்று, ஆந்திர சட்டசபையில் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

கேள்வி நேரத்தின்போது முதல் மந்திரி கோபாலரெட்டியார், தென் வட்டார இரயில்வே, தென் கிழக்கு வட்டார இரயில்வே ஆகியவற்றிற்கான வட்டார இரயில் உபயோகிப்போர் ஆலோசனை சபைகளுக்கு, ஆந்திர சட்டசபையிலிருந்து இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதற்கான இரண்டு பிரேரபணைகளைக் கொண்டுவந்தார்.

பி. சுந்தரய்யா, பி. வெங்கடேசுவாலு ஆகிய இருவரும், 'ஒவ்வொரு வட்டார சபைகளுக்கும் இரண்டு இரண்டு பிரதிநிதிகளை அனுப்பவேண்டும்' என்றும், 'விசால ஆந்திரம் அமையும்போது தனி இரயில்வே வட்டாரம் அமைக்க வேண்டும்' என்றும் கோரினர்.

முதன் மந்திரி பதிலளிக்கையில், 'ஒவ்வொரு வட்டார சபைக்கும் ஒவ்வொரு பிரதிநிதி அனுப்புமாறு மட்டுமே சபைகள் கோரியிருக்கின்றன; அப்படியிருக்கும்போது, இரண்டு பேரை அனுப்பவேண்டுமென்று கோருவது, ஒருவரை விருந்துக்கு அழைத்தால், இருவர் செல்வதைப் போலாகும்; எனவே, இப்போது ஒவ்வொரு பிரதிநிதியை அனுப்பிவிட்டு பின்னர், இரயில்வே அதிகாரிகளிடம், ஆந்திரத்திற்கு அந்த சபைகளில் அதிகமான பிரதிநிதித்துவம் வேண்டுமெனக் கோரலாம்,' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

டிசம்பர் 5-ந் தேதியன்று, சட்டசபையில் அந்த உறுப்பினர் தேர்வு நடைபெறும் என்று தலைவர் அறிவித்தார்.

திட்டத்தின் பலன்களை கண்டறிவதற்குக் குழு நியமனம்

இந்தியப் பேரரசின் போக்கு

புதுடில்லி, நவ. 30—

"பள்ளிக் கல்வியை முடித்துவிட்டு, வேலை தேடி அலைபவர்களது தொகை வரவர அதிகரித்துக் கொண்டேவருகிறது என்ற தகவலை, வேலை தேடித் தரும் நிறுவனங்கள் தருகின்ற புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன,"

என்று, திட்டத் துணை அமைச்சர் எஸ் என். மிஸ்ரா மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பதில் முதல் ஐந்தாண்டுத் திட்டம் எந்த அளவிற்குப் பயன்பட்டுள்ளது என்பதை ஆராய்ந்து அறிந்து கூறும்படி ஒரு குழு நியமிக்கப்பட்டு, அக்குழு இதனைப் பரிசீலித்து வருவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் போதுமான அளவு வேலைவாய்ப்புகளை—குறிப்பாகப் படித்தவர்களுக்கு வேலைதரும் புதிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்தவில்லையென்றும், இத்தகைய வேலையில்லாமையைக் குறைப்பதற்கான திட்டங்கள் இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் என்றும் கார்வே குழு தெரிவித்த யோசனைகளும்கூட இதற்கான மற்றொரு ஏற்பாடேயாகும் என்றும் அமைச்சர் மேலும் கூறியிருக்கிறார்.

மாநில சர்க்கார்களின் விடு கட்டும் திட்டங்கள்

மத்திய சர்க்கார் கடன் உதவி

குறைந்த வருமானமுள்ளவர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் பல்வேறு மாநில சர்க்கார்களுக்கும் 1955 அக்டோபர் மாதம் முடிய ரூ. 20,49,00,000 மத்திய சர்க்கார் கடன் அனுமதித்துள்ளது.

இதுவரை ரூ. 4,95,00,000 விநியோகிக்கப்பட்டிருக்கிறதாம்.

பஞ்சாபுக்கு ரூ. 300 இலட்சம் அனுமதிக்கப்பட்டதில் ரூ. 221 - இலட்சமும், உ. பி. - க்கு ரூ. 300- இலட்சம் அனுமதிக்கப்பட்டு ரூ. - 60 இலட்சமும் வாங்கப்பட்டிருக்கிறது.

சென்னைக்கு ரூ. 48 இலட்சம் அனுமதிக்கப்பட்டதில் ரூ. 4·5 - இலட்சம் மட்டுமே பெற்றுள்ளதாம்.

அண்ணா, பொதுச்செயலாளர் புதுவைக் கிளைகளைப் பார்வையிட்டனர்

28—11—55 காலை 9 மணிக்கு, அண்ணா அவர்களும் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தோழர்கள் பலருடன் சென்று புதுவை வட்டத்திலுள்ள பல கிளைகளைப் பார்வையிட்டனர்.

முதன் முதல் அரியகர் கிளைக் கழகத்திற்குச் சென்றனர். அங்கு ஆண்களும், பெண்களும் ஏராளமாகக் கூடியிருந்தனர்.

கழகச் சார்பில் அண்ணா அவர்கட்கும், பொதுச் செயலாளருக்கும் கைத்தறித் துண்டுகள் அணிவித்து, வாழ்த்திதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

பின்னர், பொதுச்செயலாளர் அவர்களும், அண்ணா அவர்களும் சிறிதுநேரம் உரையாடியதும், முதலியார்பேட்டைக் கழகத்திற்குச் சென்றனர்.

வழியில் முருங்கைப்பாக்கத்திலுள்ள இயக்கத் தோழர்கள் அண்ணா அவர்கட்கும், பொதுச் செயலாளருக்கும் மலர்மாலை அணிவித்து, வாழ்த்திதழ்கள் வாசித்தளித்தனர்.

முதலியார்பேட்டைக் கழகத் தோழர்கள் அண்ணா அவர்கட்கும், பொதுச் செயலாளருக்கும் மலர்மாலை அணிவித்து வாழ்த்திதழ்கள் வாசித்தளித்தபின், புதுப்பாளைய—ஓர்லெயான்பேட் கழகத்திற்கு வந்தனர். அங்கு இருவருக்கும் கைத்தறித் துண்டுகள் அணிவித்து வாழ்த்திதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

புதுப்பாளைய ஓர்லெயான் பேட்டை மாதர் சங்கத்தின் சார்பாக தி. மு. கழக மாநில மாநாட்டு நிதிக்காக 101 காலணாக்கள் அளிக்கப்பட்டன.

அவ்வூர் கழகத் துணைச் செயலாளர் தோழர் கு. சத்தியன்—தோழியர் அம்புஜம்மாள் குழந்தைக்குப் 'பூங்கொடி' என்று பெயர் சூட்டியதின் நினைவாக 128 காலணாக்கள் அளிக்கப்பட்டன

பின், பொதுச்செயலாளர் அவர்களும், அண்ணா அவர்களும் சிறிது நேரம் பேசியதும் கோவிந்தசாலைக் கழகத்திற்குச் சென்றனர். அங்கு அக்கழகத் தோழர்கள், இருவருக்கும் மலர்மாலை அணிவித்து வாழ்த்திதழ் வாசித்தளித்ததும், இருவரும் சிறிதுநேரம் பேசியபின் இலாசுப்பேட்டைக் கழகத்திற்குச் சென்றனர். அங்கு அக்கழகத் தோழர்கள், இருவருக்கும் மலர்மாலை அணிவித்து வாழ்த்திதழ் வாசித்தளித்தபின், பாக்கமுடையான்பேட்டை போலீஸ் நிலையத்திற்கு அருகில் இலாசப்பேட்டைக் கழகச் செயலாளர் தோழர் சி. ப. குருசாமி அவர்களின் சொந்த இடத்தில், பொதுச்செயலாளர் அவர்களால் கழகக் கொடி ஏற்றி வைக்கப்பட்டது.

இந்தியப் பேரரசின் கவனத்திற்கு!

நிராகரிக்கப்படும் குடிஉரிமை மனுக்கள்

கொழும்பு, நவ. 30—

கடந்த செப்டம்பர் திங்களில், இலங்கைக் குடி உரிமை கோரி, இலங்கை இந்தியர் செய்து கொண்ட மனுக்களில் 9 சதவிகிதத்திற்குக் குறைவான மனுக்களையே இலங்கை சர்க்கார் ஒப்புக்கொண்டனர் என்று சர்க்கார் புள்ளி விவரக் குறிப்புக்கள் அறிவிக்கின்றன.

மொத்தம் 8,019 மனுக்கள் பரிசீலிக்கப்பட்டன என்றும், அவற்றுள் 270 மனுக்கள் மட்டும்தான் அங்கீகரிக்கப்பட்டுள்ளன என்றும் தெரியவருகிறது.

இந்த எண்ணிக்கை உட்பட, சென்ற செப்டம்பர் திங்கள் முடிய 35,799 பேருக்கான 10,848 மனுக்கள்தான் ஒப்புக்கொள்ளப்பட்டன என்றும், 1,70,309 பேருக்காக 52,437 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன என்றும் தெரிகிறது.

மொத்தமாகக் குடியுரிமை கோரியுள்ளவர்களின் எண்ணிக்கை 8 இலட்சத்திற்கும் அதிகமானது என்பது குறிப்பிடத்தக்கது.

மம்சாபுரத்தில் பொதுச்செயலாளர்

22—11—55 அன்று மாலை $5\frac{1}{2}$ மணி அளவில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மம்சாபுரத்திற்கு வருகை தந்தார்.

முதன் முதலாக, மம்சாபுரம் பஞ்சாயத்துக் குழு சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டு, வரவேற்பிதழும் வாசித்தளிக்கப்பட்டது.

மாலை 7 மணிக்கு, பொதுச்செயலாளர் அவர்கள் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார்.

பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பொதுச்செயலாளர் அவர்களுக்கு உள்ளூர் தி. மு. கழகச் சார்பில் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது. பின்பு முத்தமிழ் மன்றம், சௌந்திர பாண்டியன் நாடக மன்றம், மற்றும் பல தனிப்பட்டவர்கள் சார்பிலும், திருவில்லிப்புத்தூர் நெசவுத் தொழிலாளர் சங்கம், திருவில்லிப்புத்தூர், இராசபாளையம், கரிசல்குளம் ஆகிய தி. மு கழகக் கிளைகள் சார்பிலும், கைத்தறி ஆடைகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

பொதுச்செயலாளர் அவர்கள் திராவிட நாடு பிரியவேண்டிய அவசியம்பற்றி உரை நிகழ்த்தினார்.

★

கடையநல்லூரில்:

23—11—55 இரவு 7 மணிக்கு, முத்துக்கிருட்டிணபுரம் மறுமலர்ச்சி மன்றச் சார்பில், மறுமலர்ச்சி திடலில், தோழர் பி ஆறுமுகம் தலைமையில் ஒரு மாபெரும் வரவேற்புப் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் ப. புகழேந்தி சிறிது நேரம் பேசியபின், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு மறுமலர்ச்சி மன்றச் சார்பில் தோழர் சு. இராமநாதன் அவர்களால் வரவேற்பிதழ் அளித்து, கைத்தறித் துண்டு அணிவிக்கப்பட்டது. தென்காசி' புளியங்குடி, சொக்கம்பட்டி ஆகிய பல ஊர்களிலுள்ள பல அமைப்புகளின் சார்பிலும் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புகளுக்கு நன்றி தெரிவித்த பின்னர், பொதுச் செயலாளர் அவர்கள் பேசுகையில், திராவிட முன்னேற்றக் கழகம் கோருகிற 'திராவிட நாடு' பிரிக்கப்பட்டால், உலகில் மிக முக்கிய இடத்தைப் பெறும் என்றும், அதைவிடச் சின்னஞ்சிறிய நாடுகள் தனித்து வாழும்போது ஏன் திராவிடம் தனித்து வாழ முடியாது என்றும், மாநில புது அமைப்புக் குழுவின் தவறுகளைச் சுட்டிக்காட்டியும், திராவிட இயக்க எதிரிகளின் பொய்ப் பிரச்சாரங்களை எடுத்துக் காட்டியும் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார்.

புதிய நாணய முறை அமுல்

சில விவரங்கள்

இந்திய நாணய (திருத்த) சட்டம் அமுலுக்கு வரும் தேதியிலிருந்து, கீழ்க்காணும் விகித நாணயங்கள் சர்க்கார் நாணயச் சாலையில் அச்சிடப்படும்:—

(1) ஒரு ரூபாய் அல்லது 100 புது பைசா;
(2) அரை ரூபாய் அல்லது 50 புது பைசா;
(3) கால் ரூபாய் அல்லது 25 புது பைசா;
(4) பத்து புது பைசா;
(5) ஐந்து புது பைசா;
(6) இரண்டு புது பைசா;
(7) ஒரு புது பைசா;

நாணய உலோகங்கள்

ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய் நாணயங்கள் நிக்கலிலும், பைசா நீங்கலாக மற்ற நாணயங்கள் செம்பும்—நிக்கலும் கலந்த உலோகத்திலும், பைசா வெண்கலத்திலும் அச்சிடப்படும்.

நாணயங்களின் முகப்பில் அசோக ஸ்தூபியிலுள்ள சிங்கத் தலையும், 'பாரத்' என்று இந்தியிலும், 'இந்தியா' என்று ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டிருக்கும். மறுபக்கம் நாணயம் வெளியிடப்பட்ட வருஷமும் சர்வதேச எண்களில் நாணயத்தின் மதிப்பும் பொறிக்கப்பட்டிருக்கும்.

ரூபாய், அரை ரூபாய், கால் ரூபாய் நாணயங்களில் பின்புறத்தில் இரு ஓரங்களிலும் தானியக் கதிர் சின்னம் இருக்கும்.

எப்போது அமுலாகும்?

புதிய தசாம்ச முறை நாணயங்கள் 1957-ல் எப்போதாவது அமுலுக்கு வருமென்றும், பிறகு மூன்று ஆண்டுகளுக்கு பழைய நாணயங்களும் பழக்கத்தில் இருந்து அமுலுக்கு வருமென்றும் மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நிவாரணம் கோரி 'உண்ணாவிரதம்'

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களாம்!

கோரக்பூர், டிச. 2—

கோரக்பூர் மாவட்டத்தில் உள்ள பகஹர எனும் கிராமத்தைச் சேர்ந்த ஆறு பேர் இங்குள்ள வட்டார 'எஞ்சினியர்' அலுவலகத்தின் முன்பாக, சாகும்வரை உண்ணாவிரதம் துவங்கியிருப்பதாக அறிவித்திருக்கின்றனராம்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட தங்களுக்குப் போதுமான நிவாரணம் தரப்படவில்லை என்பவே உண்ணாவிரதத்திற்குக் காரணமாம்.

மேலும் அவர்கள், தங்கள் கிராமத்தின் மட்டத்தை உயர்த்தினால் தான் வெள்ளத்திலிருந்து பாதுகாப்புக்கிடைக்கும் என்பதால் கிராமத்தில் உள்ள வீடு ஒவ்வொன்றுக்கும் ரூ. 500 பணம் தரவேண்டும் என்றும் கோருகின்றனராம்!

மலேயாவில் மீண்டும் மனித வேட்டையா?

கோலாலம்பூர், டிச. 3—

மலேயாவின் மத்தியப் பகுதியிலுள்ள செக்கிசெம்விலான் எனுமிடத்திலும், தாய்லாந்து எல்லையோரத்திலுள்ள கெட்டா மாநிலத்திலும் கம்யூனிஸ்டுக் 'கொரில்லா'க்கள் ஒளிந்துகொண்டிருப்பதாகக் கூறப்படும் காடுகளை, சென்ற 6 நாட்களாக, பிரிட்டன் குண்டு விமானங்களும் வேட்டை விமானங்களும் மிகக் கடுமையாகத் தாக்கி வருகின்றன என்ற தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டில்கூட இவ்வளவு பெரிய அளவில் தாக்குதல்கள் எதும் நடைபெறவில்லை என்றும் கருத்தறிவிக்கப்பட்டிருக்கிறது.

மலேயா கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் சிங்-பென் என்பாரை, மலேயா முதலமைச்சர் அப்துர் ரஹிமான் சந்தித்து, கம்யூனிஸ்டுகள் சரணடைவதற்கான நிபந்தனைகள் குறித்து இந்த வாரத்தில் விளக்கம் தருவது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

கர்நாடக மாநில அமைப்பு

மைசூர் சட்டசபை சம்மதம்

பெங்களூர், டிச. 1—

கர்நாடக மாநில அமைப்பை அங்கீகரிக்கும் முதன் மந்திரி அனுமந்தையாவின் தீர்மானத்தை சட்டசபை ஏற்றுக் கொண்டது.

பிரேரணைக்குச் சாதகமாக 51 பேரும், எதிர்த்து 3 பேரும் வாக்களித்தனர். ஆனால், மேல் சபை ஒருமனதாக வாக்களித்தது.

பெல்லாரி முழுவதும் அடங்கிய இப்போதைய மைசூர், பீஜபூர், தார்வார், வடகன்னட மாவட்டங்கள், ரெய்ச்சூர், குல்பர்கா மாவட்டங்கள், ஐதராபாத்தில் பீடார் மாவட்டத்தைச் சேர்ந்த 4 வட்டங்கள், சந்திரகிரி ஆற்றுக்குத் தெற்கேயுள்ள காசர்கோடு தாலுகா பகுதி தவிர தென்கன்னட மாவட்டம், சென்னையில் கோவை மாவட்டத்தில் உள்ள கொள்ளேகால் வட்டம், குடகு மாநிலம், மற்றும் புதிய மாநிலத்தில் சேரவிரும்பும் மக்கள் உள்ள பகுதிகள் ஆகியவை அடங்கியதாக கர்நாடக மாநிலம் அமைய வேண்டும் என்று பிரேரணை கூறுகிறது.

புதிய மாநிலத்திற்கு மைசூர் மாநிலம் என்ற பெயரே தொடர்ந்து இருந்து வரவேண்டும் என்று சட்டசபை கருதுவதாய்த் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அணு ஆயுத சோதனை:

ஐ. நா. சபையில் தீர்மானம்

நியூயார்க், டிச. 1—

அணு சக்தி ஆயுதங்களை பரிசோதனைக்காக வெடிப்பதை நிறுத்த ஐ. நா. கட்டளையிடுமாறு இந்தியா தீர்மானம் ஒன்றை ஐ. நா.வில் கொண்டுவந்தது.

பத்திரிகையாளர் வேலை நிலை மசோதா

'ராஜ்யங்கள் சபை'யில் நிறைவேற்றம்

புதுடில்லி, டிச. 1—

உழைக்கும் பத்திரிகையாளர் வேலை நிலைமை வகையறா மசோதா ராஜ்யங்கள் சபையில் ஒரு எதிர்ப்புக்கூட இன்றி நிறைவேறியுள்ளது.

உழைக்கும் பத்திரிகையாளருக்கு குறைந்தபட்ச சம்பளம்மட்டுமின்றி சம்பளவிகிதங்களையும் நிர்ணயிக்க சம்பள 'போர்டு' ஒன்று ஏற்படுத்தவும் உத்தேசித்திருப்பதாக தகவல், ஒலிபரப்பு இலாகா மந்திரி டாக்டர் கேஸ்கர் தெரிவித்திருக்கிறார்.

உழைக்கும் பத்திரிகையாளரை வேலையிலிருந்து நீக்குவதானால் மூன்று மாத முன்னெச்சரிக்கையும், ஆசிரியரை வேலையிலிருந்து நீக்குவதானால் ஆறுமாத முன்னெச்சரிக்கையும் கொடுக்கப்பட வேண்டும் என்றும் மசோதாவில் முக்கியமான திருத்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

உலக சுகாதார நிறுவன அதிகாரிகள்

கொள்ளையரால் தூக்கிச் செல்லப்பட்டனராம்!

இரங்கூன், டிச. 2—

மாண்டலேயிலிருந்து 45 மைல் தொலைவில் உள்ள மேய்மோ எனும் இடத்தில் உள்ள ஐ. நா. சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகளை, அவர்கள் அலுவலகத்திற்குள் புகுந்து ஆயுதங்களுடன் கூடிய சுமார் 100 பேர்—'புரட்சிக்காரர்'கள் என்று கருதப்படுவோர் தூக்கிச் சென்றுவிட்டதுடன், அலுவலகச் சொத்துக்களையும் கொள்ளையிட்டுச் சென்றுவிட்டனராம்.

தூக்கிச் செல்லப்பட்டவர்களில் ஒருவர், டாக்டர் போஸ்டிக்லாயன் என்ற இத்தாலியர், மற்றவர் டாக்டர் ஜி சாம்பசிவம் என்ற தென்னாட்டுக்காரர் என்று கூறப்படுகிறது.

பர்மா சர்க்காருக்கு உதவியாக மலேரியா ஒழிப்பில் இந்த அதிகாரிகள் ஈடுபட்டிருந்தனராம்.

தூக்கிச் செல்லப்பட்ட இருவரையும் பற்றித் தகவல் எதும் இல்லை என்றும், அவர்களை விடுவிப்பதற்கு ஏதேனும் பணம் பெறும் நோக்கத்துடன், கொள்ளைக்காரர்கள் அவர்களைச் சிறைப்பிடித்து வைத்திருக்கக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

ஒரு கோழிக்கு ரூ. 200 நஷ்டஈடு

புதுடில்லி, டிச. 2—

இமாசலப் பிரதேசத்தில் சுற்றுப் பயணம் செய்துவரும் சவுதி அரேபிய மன்னரின் காரில் அகப்பட்டு ஒரு கோழி இறந்துபட்டது. உடனே, இறந்துபோன கோழியின் சொந்தக்காரியான ஒரு கிழவிக்கு, நஷ்டஈடாக ரூ. 200-ஐ சவுதி அரேபிய மன்னர் கொடுத்தாராம்.

ஏன் இன்னும் தாமதம்?

சென்னை, டிச 2—

'ஒரு மாநிலத்திலுள்ள உயர்நீதிமன்றத்தில மூன்றில் ஒரு பங்கினர் வேறு மாநிலத்தவராக இருக்க வேண்டும்' என்ற மாநிலக் குழுவினரின் சிபாரிசின் மீது சர்க்கார் இன்னும் எவ்வித முடிவும் மேற்கொள்ளவில்லை என்றும், அம்முடிவு மேற்கொள்ளப்பட்ட பின்னர், அது விரைவிலேயே மத்திய சர்க்காருக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் அமைச்சர் சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

சி. பி. சிற்றரசு

சுற்றுப்பயணம்

டிச. 4 முக்கூடல்
8 சென்னை
11 அலசூர் (பெங்களூர்)
15 திலக்கோட்டை (திருமணம்)
16 பண்ணைக்காடு (கோடைமலை)
17 பாகனேரி
18 குடந்தை (பொதுக்குழு)

பெல்லாரிக்காகப் போராட்டம்

இதுவரை 562 பேர் கைது

'அகண்ட கர்நாடக ராஜ்ய நிர்மாண பரிஷத்'தினர் நடத்திவரும் 'சத்தியாக்கிரகத்'தை ஒட்டி இதுவரை 562 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

'பெல்லாரியை ஆந்திரத்துடன் இணைக்கவேண்டும்' என்ற மாநிலக் குழுவின் சிபாரிசுக்கு எதிராகவே இந்தப் 'போராட்டம்' நடைபெறுகிறது.

சோவியத் நிபுணர்களுக்கு தினம் ரூ. 100!

இந்தியாவிற்கு வந்துள்ள சோவியத் பூகர்ப்ப நிபுணர்கள் 5 பேர்களுக்கு, அவர்கள் தினச் செலவுக்கென தினம் நூறு ரூபாய் தரப்படுவதாகக் கூறப்படுகிறது.

இயற்கைவள இலாகா மந்திரி சபையினர் இன்னமும் இந்த நிபுணர்களின் சம்பளம் இவ்வளவுதான் என நிர்ணயம் செய்யவில்லையாம்! இன்னும் சம்பள நிர்ணயம் பரிசீலனையிலேயே இருக்கிறதாம்!

பிரெஞ்சு மந்திரி சபை கலைக்கப்பட்டது

பாரேக்குக் கட்சியிலிருந்தும் கல்தா!

நம்பிக்கைத் தீர்மானத்தின் மீது தோல்வி பெற்றுவிட்ட பாரே தலைமையில் உள்ள பிரெஞ்சு மந்திரி சபையை, பிரெஞ்சுக் குடியரசுத் தலைவர் கலைத்துவிடும்படி உத்தரவிட்டுவிட்டார் என்று தெரிகிறது.

மந்திரிசபை கலைக்கப்பட்டதை யொட்டி, ஒரு மாத காலத்திற்குள் மறு தேர்தல் நடக்க வேண்டும் என்று பிரதமர் தெரிவித்து தேர்தலை அவசர அவசியமாக்கியதற்குஆட்சேபணை தெரிவித்து, அவர் சார்ந்துள்ள ராடிகல் கட்சியின் நிர்வாகிகள் அவரை கட்சியினின்றும் விலக்கி வைத்துவிட்டனர் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மாளிகை வாழ்வோர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாத்தளிக்கும் என்ற நம்பிக்கை பெற்று வாழ வழி ஏற்படும்."

இவ்வாறு, சென்னை மாநில முதலமைச்சர் காமராசர், நேற்று மாலை சென்னை-இராஜா அண்ணாமலைபுரத்தில், சென்னை நகர அபிவிருத்திக் குழுவினரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட குறைந்த வருமானமுள்ளவர்களுக்கான வீடு கட்டித் தரும் திட்டத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தனையும் பேசிய காமராசர், சேரி வாழ்வோருக்கும் சில 'உபதேசங்களைச் செய்திருக்கிறார்.

சேரி வாழ்வோர் வேறு இடங்களில் குடியேறுமாறு கேட்கப்படும்போதும், தாங்கள் வாழும் சேரிகளைவிட்டு வெளியேறுமாறு கோரப்படும்போதும் அவர்கள் தடை ஏதும் சொல்லக்கூடாது என்றும், அதிகாரிகளுடன் ஒத்துழைத்து, அதிகாரிகள் கட்டளைப்படி நடக்க வேண்டுமென்றும், சில தலைவர்களின் சுயநலனுக்குப் பலியாகக் கூடாது என்றும் காமராசர் கூறினாராம்!

மதத்தை சொந்த நலனுக்கு பயன்படுத்துவோர்!

பண்டித நேருவின் கண்டனம்!

'கிறித்துவ மிஷன்'களில் குறைபாடில்லை என்கிறார்

புதுடில்லி, டிச. 2—

மத மாற்றங்களை ஒழுங்குபடுத்துவதற்கு என்று கூறி தனி நபர் ஒருவர் கொண்டுவந்த மசோதா மக்கள் சபையில் பெருவாரியான வாக்குகளால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மசோதா, 'நாம் நீக்கவேண்டும் என்று விரும்புகிற தீமைகளை ஒழிப்பதற்கு மாறாக, புதிய தீமைகளையும், கஷ்டங்களையும் உருவாக்கும்' என்று, பிரதமர் பண்டித நேரு தெரிவித்ததை ஒட்டி, மசோதாவைக் கொண்டுவந்த ஜெதலால் ஜோஷி என்பார் மசோதாவைத் திரும்பப் பெற விழைவதாக அறிவித்தார்.

பண்டித நேரு மேலும் குறிப்பிட்டதாவது:—

"மக்கள் மனதில் பெரும் கிளர்ச்சியை ஊட்டக்கூடிய ஒரு விஷயம் குறித்து நாம் இப்போது இங்கே பேசிக்கொண்டிருக்கிறோம்.

"மதமாற்றம் அல்லது மதச் சம்பிரதாய நடவடிக்கை என்ற பெயரில் தீமைகள் பல நடைபெறுவது உண்மைதான்—சந்தேகமில்லை. இந்தத் தீமை புரிவோர் குறிப்பிட்ட ஒரு மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பதல்ல—பல மதங்களையும் சேர்ந்தவர்கள். இவர்களில் சிலர், ஒரு நியாய வரம்பையும் மீறி இந்தத் தீமையைப் புரிகின்றனர்—எல்லா மதவாதிகளுமல்ல - சிலர் தான்.

"அனாதை விடுதிகள், பெண்கள் இல்லம் போன்றவையின் நிர்வாகம் குறித்து விசாரணை செய்வதற்காக, திட்டக் குழு நியமித்த குழு ஒன்று தனது அறிக்கையைத் தந்துள்ளது; அதில் பல விஷயங்கள் அடங்கியிருக்கின்றன; இந்தச் சபைக்கு அந்த அறிக்கை மீது விவாதம் நடத்தும் சந்தர்ப்பம் கிடைக்கும் என நம்புகிறேன்.

"கிறித்துவ மிஷன்களால் நடத்தப்படும் அனாதை விடுதிகளிலும், இல்லங்களிலும் தவறுகள் ஏதும் இருந்ததாக அந்தக் குழுவினருக்குத் தெரியவரவில்லை; ஆனால், இதர மதத்தினர் நடத்தும் விடுதிகளிலும், இல்லங்களிலும்தான் தவறுகள் பெரும் அளவில் நடைபெற்றிருப்பதாக குழு கண்டறிந்திருக்கிறது.

"இதனாலேயே இதர மதங்களும், நிறுவனங்களும் தவறானவை என்பதல்ல; ஆனால், தவறான நபர்கள் இவற்றைப் பயன்படுத்திக்கொண்டு, பணம் சம்பாதிப்பதற்காக எல்லா வகை கீழ்த்தரமான செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.

"மதம் முதலியவற்றை தங்கள் சொந்த நலனுக்குப் பயன்படுத்துவோரை நாம் பிரித்துப் பார்க்கவேண்டும்."

இந்தி ஆசிரியர்களைப் பயிற்றுவிக்க!

இந்திய பேரரசு பண உதவி

புதுடில்லி, டிச. 2—

"இந்தி மொழி வழங்காத பகுதிகளில், இந்தி ஆசிரியர்களைப் பயிற்றுவிப்பதற்காக இந்தியப் பேரரசு, பள்ளிக்கூடங்கள் திறப்பதற்கென உதவி செய்யும்,"

என்று, கல்வி இலாகா மக்கள் சபைச் செயலாளர் டாக்டர் மனமோகன்தாஸ் மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

கடிதம் தீட்டிவிட்டனர்

சென்னை, டிச. 2—

ஆந்திரா—சென்னை மாநிலங்களுக்கிடையே எல்லைப்புறத் தகராறுகளுக்குள்ளான பகுதிகளின் வருங்காலம் பற்றி ஆலோசிக்க ஒரு எல்லைக் குழு நியமிக்குமாறு இந்திய சர்க்காரைக் கேட்டுக்கொள்கின்ற கடிதம் ஒன்றை சென்னை சர்க்கார் மத்திய சர்க்காருக்கு அனுப்பிவிட்டனராம்.

மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்ட அதே கடிதத்தின் நகல் இணைக்கப்பட்ட மற்றொரு கடிதம் ஆந்திர சர்க்காருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாம்.

எஃகு உற்பத்திக்கு 4-வது தொழிற்சாலை

நான்காவது எஃகு உற்பத்திச்சாலை நிர்மாணிப்பது பற்றி எந்தத் திட்டங்களைப் பற்றியும் தற்சமயம் சர்க்கார் ஆலோசிக்கவில்லையாம்; என்றாலும், எஃகு உற்பத்திக்காக நான்காவது தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படுமானால், அதை பீகாரிலுள்ள பொக்காரோவுக்கருகிலுள்ள இடத்தில் நிறுவும் வகையில் அப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதென முடிவு செய்யப்பட்டிருக்கிறதாம்!

மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், அமைச்சர் டி. டி கிருஷ்ணமாச்சாரி இவ்வாறெல்லாம் கூறியுள்ளார்.

பஞ்சாயத்துத் தேர்தல் ஒத்திவைப்பு

பக்தவத்சலம் தகவல்

சென்னை, நவ. 30—

"பஞ்சாயத்துக்கள் சட்டத்தைத் திருத்தி அமைப்பது பற்றி சர்க்கார் ஆலோசனை செய்துவருகிறது. இதை உத்தேசித்து பஞ்சாயத்துக்கள் பொதுத் தேர்தல் ஒரு ஆண்டுக் காலத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது"

என்ற தகவலை, சென்னை சட்டசபையில் விவசாய அமைச்சர் பக்தவத்சலம் தந்திருக்கிறார்.

இப்போது இருந்து வருகிற ஏற்பாடுகளின்படி 1957 ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் சட்டசபைகளுக்கான பொதுத் தேர்தல் நடத்த உத்தேசமிடப்பட்டிருக்கிறது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஆப்கனில் பெருந்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றும் வதந்திகள் உலவுகின்றன என்றும், அதிகாரிகள் கைது பற்றிய இந்தச் செய்தி எந்த வட்டாரத்திலிருந்து கிடைத்தது என்பதை நிச்சயமாகத் தெரிய முடியவில்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது.

ஆப்கன் பாதுகாப்பு அமைச்சர், மற்றும் பல அதிகாரிகளும் கைது செய்யப்பட்டு பதவி விலக்கம் செய்யப்பட்ட நிகழ்ச்சிகள் குறித்துத் தங்களுக்கு எவ்விதத் தகவலும் கிடைக்கவில்லை என்று புதுடில்லியிலுள்ள ஆப்கன் தூதுவராலயத்தினர் தெரிவித்திருக்கின்றனராம்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.